
165

உ

திருப்பட்டீச்சரம்

# ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத் தல வரலாறு

165
3-38



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUL 1958
MADRAS

ஜகோபுரம் முன்தோற்றம்

Q2:38.21193.7
N58
N2825

தான வெளியீடு — 1958

உ

திருப்பட்டீச்சரம்

# ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலய தல வரலாறு

( தேவாரப் பாடல் பெற்றது )

எழுதியவர் :

திரு R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்

தமிழ் ஆசிரியர், வரலாற்றுச் செல்வர், திருச்சிராப்பள்ளி

( Writer of Guide Books for Temples and Religious Lecturer, H. R. & C. E.)

ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் தேவஸ்தான

வெளியீடு.

1958

உரிமைப் பதிப்பு ]

[ விலை 37 ந. பை. (6 அணா)

NADU ARCHIVES LIBRARY
112825

# பதிப்புரை

ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஸ்ரீ பட்டீசர் எழுந்தருளிய ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் கோயிலின் பழம் பெருமைகளை இவ் வரலாறு கூறுகிறது. இப் பெருமை வாய்ந்த தலத்தின் வரலாறு பல ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்து பக்தர்களுக்கு பயன்பட்டிருக்க வேண்டியது. இருந்தும், நிர்வாகத்தினர் வெளியிட சுமார் 10 ஆண்டுகளாக பெரு முயற்சி எடுத்தும் நிறைவேறவில்லை. இப்போது இரண்டு ஆண்டு முயற்சியின்பேரில் இவ்வரிய புத்தகம் வெளிவருவது பெரிய திருப்பணி ஆகும்.

யாவரும் எளிதில் பெற்றுப் பயன் பெறும்படி மிகக் குறைந்த விலையில் இது வழங்கப்படுகிறது. திருச்சி, தமிழ் ஆசிரியர், **திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்** எளிய நடையில் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (H. R. & C. E.) ஆணையாளர், **திரு. A. உத்தண்டராம பிள்ளை**, B.A., B. L., I. A. S. அவர்கள், துணை ஆணையாளர், **திரு. A. சர்க்கரை**, B. A., B. L., உதவி - ஆணையாளர், **திரு. B. ரங்காச்சாரியார்**, M. A., அவர்கள் ஆகியோர்களின் ஊக்கத்தால் இது வெளியிடப் படுகிறது.

அன்பர்கள் படித்துப் பயன்பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**V. S. ராஜகோபால் நாயுடு,**
**M.N.G. ராஜமன்னார் செட்டியார்,**
**P. S. அமிர்தலிங்கம் பிள்ளை,**
**T. R. ஆறுமுகம் பிள்ளை,**
**G. சுந்தரராஜ வன்னியர்,**
டிரஸ்டிகள்.

**T. ஞானப்பிரகாசம்,**
நிர்வாக அதிகாரி,
ஸ்ரீ தேனுபுரீஸ்வரர்
தேவஸ்தானம்,
பட்டீச்சரம்,
15-5-58.

O2: 38. 21193.T
N58

# முன்னுரை.

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் ஊற்றிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பர் ஆன்றோர். சோழ நாட்டில் காணும் இடங்களெல்லாம் கண்ணைக்கவரும்படியான பல கோயில்கள் உள்ளன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகாவில் தாராசுரம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கில் 2 மைல் தூரத்தில் பட்டீச்சரம் என்னும் தலம் உள்ளது. காமதேனுப் பசுவின் புத்திரி பட்டி வழிபட்டது. பழமையான கோயில். திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியது. அவருக்கு முத்துப்பந்தல் அளிக்கப்பெற்றது. நந்தி விலகியிருப்பது, கோவிந்த தீக்ஷதர் திருப்பணி செய்தது. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் புராணம் பாடப்பெற்றது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) அனுமதிப்படி இவ்வரலாறு தல புராணத்தையும், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தையும் தழுவிச்சுருக்கமாக எழுதப்பெற்று (H. R. & C. E.) தஞ்சை உதவி ஆணையாளர் (Asst. Commisioner) அவர்களால் பார்வையிடப்பெற்றது.

பழங்கால சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும் தலவரலாறுகள் வெளிவரச்செய்வதிலும், திருத்தொண்டர்களின் திருக்கோயில்களை அமைப்பதிலும் தற்போதுள்ள அறநிலையப்பாதுகாப்புத் தலைவர் **திரு. A.** உத்தண்டராம பிள்ளை B. A., B. L., அவர்களும் மற்றையோர்களும் ஆவன செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி. இதில் கோயில் விளக்கமும் தலப்பெருமைகளும் புராண வரலாறுகளும் துதிப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அன்பர்கள் படித்துப் பட்டீச்சரப் பெருமானின் திருவருளைப்பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி,
20—10—57.

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

# உள்ளடக்கம்.


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கோயிலும், இருப்பிடமும் | ... | 1 |
| 2 | கோயிலின் அமைப்பு | ... | 5 |
| 3 | கோயிலின் படம் | ... | 7 |
| 4 | மூர்த்திகளின் பெயர்கள் | ... | 9 |
| 5 | தீர்த்தங்கள் | ... | 6 |
| 6 | தலப்பெருமைகள் | ... | 10 |
| 7 | திருப்பணிகள் | ... | 13 |
| 8 | சிற்பங்கள் | ... | 15 |
| 9 | கல்வெட்டுக்கள் | ... | 16 |
| 10 | தினப்பூஜையும், திருவிழாக்களும் | ... | 17 |
| 11 | கோயில் தரிசன முறை | ... | 21 |
| 12 | வருமானமும், சொத்துக்களும் | ... | 22 |
| 13 | நிர்வாகம் | ... | 22 |
| 14 | புராண வரலாறுகள் | ... | 23 |
| 15 | இலக்கியப் பாடல்கள் | ... | i |
| 16 | பட்டீச்சரப்பதிகம் (திருஞானசம்பந்தர்) | ... | iii |
| 17 | பட்டீச்சரப்புராணம் (மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை) | ... | v |
| 18 | பட்டீச்சரம் துர்க்கையம்மன் பதிகம் (சுவாமிமலை தேவாரம் ச. பாலசுப்பிரமணிய தேசிகர்) | ... | viii |


## கோயில் விளக்கம்.

| | | |
|---|---|---|
| கோயில் | — | பட்டீச்சரம் |
| இடம் | — | பட்டீஸ்வரம் |
| வீநாயகர் | — | மதவாரணப்பிள்ளையார் |
| மூலவர் | — | பட்டீச்சரர், ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் |
| அம்மன் | — | ஸ்ரீ ஞானம்பிகை, பல்வளைநாயகி |
| தீர்த்தம் | — | ஞானவாவி, கோடி தீர்த்தம் முதலியன |
| விருக்ஷம் | — | வன்னிமரம் |

வழிபட்டோர் :— பட்டி, இராமர் முதலியோர்

முக்கிய விழா :— 1 வைகாசி விசாகம்
2 முத்துப்பந்தல் (பிரதி ஆனி முதல் நாள்)
3 கருட தீர்த்தம் (மார்கழி அமாவாசை)



ஞானதீர்த்தமும், ஸ்ரீ ஆக்ஞாகணபதி ஆலயமும், உட்கோபுரமும்.



காமதேனுப்பசுவின் புத்திரி பட்டிப்பசு பால் அபிஷேகம் செய்து
வழிபடும் காட்சி

உ

# திருப்பட்டீச்சரம்

# ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் கோயில் வரலாறு.

"நீரின்மலி புன்சடையர் நீளரவு கச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது ஏந்தியுடை கோவணமும் மானின் உரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள் காதல்செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழைசை பட்டீச்சரமேத்தவினை பற்றழியுமே."

—திருஞானசம்பந்தர்.

## 1. கோயிலும், இருப்பிடமும்

எப்போதும் வற்ருத வளமுடைய நீர்ப்பெருக்கையுடைய காவிரிநதி பாயும் நாடு சோழ நாடு. "சோழ நாடு சோறுடைத்து" என்னும் பழமொழியைப் பெற்றது. இந் நாட்டின் பெருமையை மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின் வருமாறு காட்டுகிருர்.

"பூவினுள் பதுமம் போலும் புருடருள் திருமால் போலும்
காவினுள் கற்பம் போலும் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான் போலும் அறத்துள் இல்லறமே போலும்
நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு."

மேலும் "முந்நாட்டின் முன்நாடாய்ச் சோழர் குலக் கொடியே என்னக் காவேரி வளங்காட்டும் திருநாட்டின் பெருமையது கரையப்போமோ" என்று மற்ருேராசிரியர் கூறுகிருர்.

இத்தகைய சோழ நாடு மிகுதியான கோயில்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், சாலைகளும், வாவிகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத்தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், காண்போருக்குத் தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத்தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் நிலங்கள் அமைந்திருப்பதுபோல உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பண்புடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் பாங்கினெடு பல தளிகள் இல்லாவூரும் அவை எல்லாம் ஊரல்ல" என்ற படிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ வைணவத் தலங்கள் பல ஆங்காங்கு அமைந்துள்ளன. இவ்வகையில் சோழநாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

"நோக்கிய இடங்களெல்லாம் நுவலருந் தலங்களாக
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தியாக
ஆக்கிய தவத்தாலும் அடைந்தவர்க் கறமென்றேதும்
பாக்கிய மாக்கிமே லுய்ப்பதுமுது சென்னிநாடு."

— மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை.

இச்சோழ நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவை சிவன்கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன.

இவைகளில் அந்தந்த சமயத்தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்களும் பெயர் மட்டும் குறிக்கப் பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும் தனிப்பாடல்பெற்ற தலங் களும், பிற்காலத்தில் அன்பர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத்தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் தேவாரப் பாடல்பெற்ற 274 தலங்களில் காவிரிக்குத் தென் கரையிலுள்ள 127 தலங்களில் 23-வது தலமாகப் பட்டீச்சரக் கோயில் அமைந்துள்ளது. திருஞான சம்பந்தர் இத்தலத்தைக் குறித்துத் தேவாரம் பாடி யுள்ளார்.

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகாவில் கும்பகோணத்துக்கடுத்த தாராசுரம் ரயில் நிலையத்தி லிருந்து தென்மேற்கில் 2-மைல் தூரத்தில் பட்டீச்சரம் என்னும் தலம் உள்ளது. காமதேனுப் பசுவின் புத்திரி களில் பட்டி பூசித்ததால் பட்டீச்சரம் என்று பெயர் ஏற்பட்டது. ஈச்சரம் என்ற முடிவைக்கொண்ட தலங் களுள் இதுவும் ஒன்று. கோயில் தூண் ஒன்றில் பட்டிப் பசு தனது முலைக்காம்புகளால் பால் அபிஷேகம் செய்து வழிபடுவது போன்ற ஓர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. பட்டீச்சரம் என்னும் கோயிலின் பெயர் ஊரின் பெய ராக உள்ளது. திருஞானசம்பந்தர் காலத்தில் பழை யாறையைச்சேர்ந்த மழபாடி என்று வழங்கப்பெற்றது. பழையாறை என்பது சோழ அரசர்கள் முடிசூடும் பெரு நகரங்களில் ஒன்ருகவிளங்கியது. இதற்கு முடிகொண்ட சோழபுரம் என்னும் பெயரும் உண்டு. இது பல ஊர் களாகப்பிரிந்து வழங்குகிறது. எனவே பட்டீச்சரம் என் பது பழையாறையைச் சேர்ந்த மழபாடியிலுள்ள தல

மாகும், இதை திருஞானசம்பந்தர் "பொழில்சூழ் பழையுள் மாடமழபாடியுறை பட்டீச்சரம்" என்று பாடியுள்ளார். (கொள்ளிட நதியின் வடகரையிலுள்ள மழபாடித்தலம் வேறானது.) தேவி தவஞ் செய்த தால் இத்தலத்திற்குத் தேவிவனம், சக்திவனம் என்னும் பெயர்களும் வழங்கும். இதற்கு அடையாளமாகக் கோயிலில் ஓர் இடத்தில் ஒற்றைக்காலில் நின்று ஒரு கையைத் தலைமேல் வைத்துத் தவஞ் செய்யும் நிலையில் ஓர் அம்மன் உள்ளது.

இவ்வூரில் தபால் நிலையம், பஞ்சாயத்து நிலையம், தேசிய விஸ்தரிப்புத்திட்டம், முதலியனவும் ஜில்லா போர்டைச் சேர்ந்த துவக்கநிலைப் பள்ளியும், மானேஜ் மெண்ட் பள்ளிக்கூடமும் உள்ளன. ஜனத்தொகை சுமார் 5000. பட்டு நெசவுத்தொழிலும் சாகுபடியும் நடைபெறுகின்றன. தென்னை மரங்கள் மிகுதி. ஊரிலும் கோயிலிலும் மின்சார விளக்குகள் அமைக்கப்பட் டுள்ளன. ஊரில் ஆங்காங்கு குழாய்க் கிணறுகள் உள்ளன. பஞ்சாயத்து ஆட்சி நடைபெறுகிறது. இவ் வூருக்கு வடக்கில் சோழன்மாளிகையும், கிழக்கில் முழையூரும், தெற்கில் திருமலைராஜன் ஆறும், மேற்கில் கோபிநாதப்பெருமாள்கோயிலும் எல்லைகளாகஉள்ளன. ஊரைச்சுற்றிலும் நன்செய் நிலங்களும், தோப்புக்களும் வாய்க்கால்களும் ஆங்காங்கு உள்ளன. இவ்வூரின் கிழக்கில் 1 மைல் தூரத்தில் சிவப்பிரகாச சுவாமி களுடைய மடம் இருக்கிறது.

**இவ்வூரை அடுத்துள்ள தலங்கள் :** இத்தலத்தின் வடக்குப்பக்கத்தில் திருச்சத்திமுற்றம் என்னும் தலம் உள்ளது. தேவி லிங்கத்தைத் தழுவுதல் போன்ற அழகிய

சிற்பம் அமைந்த லிங்கம் உள்ளது. இது பஞ்ச நந்தி க்ஷேத்திரம். எல்லா நந்திகளும் சந்நிதியினின்றும் விலகியுள்ளன. மற்றும் காமதேனுவின் புத்திரிகளில் விமலி வழிபட்ட பழையாறை வடதளியும், சபளி வழி பட்ட திருமேற்றளியும் நந்தினி வழிபட்ட முழையூரும் இத்தலத்தைச் சூழ்ந்துள்ளன. மேலும் தெக்ஷண துவாரகை என்று உ. வே, சுவாமிநாதய்யர் அவர்கள் குறிப்பிட்ட கோபிநாதப் பெருமாள் கோயிலும், விஸ்வ நாதர் கோயிலும், ராமநாதர் கோயிலும், பிர்மநந்தீஸ் வரர் கோயிலும் இத்தலத்துக்கு மேற்கில் உள்ளது. தெற்கே கோவிந்தகுடி, ஆவூர், மூச்சுக்காடு என்றதலங் களாலும் சூழப்பெற்றது.


## 2. கோயிலின் அமைப்பு.

நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஐந்து பெரிய கோபுரங்களைக்கொண்டுள்ளது. உள்ளே 3 பிர காரங்களும் வெளியில் ஒரு வீதியும் உள்ளன. கோயிலுக் குள் முதல் பிரகாரத்தில் நடு மண்டபத்தில் மூலவர் பட்டீசரும், வெளியில் சோமாஸ்கந்தரும், திருஞான சம்பந்தரும் வீற்றிருக்கின்றனர். சுற்றிலும் சப்த கன்னிகைகள், சுவர்ணவிநாயகர், மகாலிங்கம், சண்முகர் ராமலிங்கம், லட்சுமி முதலிய சந்நிதிகள் உள்ளன. வட மேற்கு மூலையில் அறுபத்துமூவர் மண்டபம் உள்ளது. இதில் சிலைகள் பின்னப்பட்டுள்ளன. வடக்கில் திரு ஞானசம்பந்தர், ராமர் ஆகியோருடைய படங்களும், நடராஜர் சந்நிதியும், அதன் கீழ்புரத்தில் தவஞ்செய்யும் அம்மன் சந்நிதியும், கேணியும், பள்ளியறையும், நவக்

கிரஹங்களும், சூரியன், சண்டிகேஸ்வரர், முதலியோருடைய சந்நிதிகளும் உள்ளன. வடபுறத்தில் அம்மன் கோயில் உள்ளது. அதன் உள் மண்டபத்தில் கோவிந்த தீக்ஷதர், அவர் மனைவி, இருவருடைய உருவச்சிலைகள் உள்ளன. சுவாமி கோயிலின் 2-ம் பிரகாரத்தில் கீழ் புறத்தில் அலங்கார மண்டபமும், தேவஸ்தான அலுவலகமும் உள்ளன. இந்தப்பிரகாரத்தில் தெற்கில் தேவாரம் பாடிய மூவர் சந்நிதியும், மதவாரணப் பிள்ளையார் சந்நிதியும், கிழக்கில் யாகசாலையும், பைரவர் சந்நிதியும் உள்ளன. உள்கோபுர வாயிலை அடுத்து அனுக்ஞை விநாயகர் கோயிலும், முருகன் கோயிலும், பசுமடமும் உள்ளன. உள்கோபுர வாயிலுக்கு முன்னே வன்னி மரமும், ஞானவாவியும், திருஞானசம்பந்தர் மடமும், நந்தவனமும் வடக்குக்கோபுர வாயிலில் துர்க்கை கோயிலும் உள்ளன. கோயிலில் உள்ள மூர்த்திகளில் மதவாரணப்பிள்ளையார், சண்முகர், பைரவர், துர்க்கை ஆகியோருடைய சிலைகள் சோழன்மாளிகையிலிருந்து கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டன. துர்க்கையம்மன் முற்காலத்தில் சோழன்மாளிகைக் கோட்டையின் காவல் தெய்வமாய் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. "Inside the Pattiswaram temple there is an idol which is now called Kottai Vayil Durgai (the Durga at the fortress gate) one may not be wrong in assuring that this was the idol which presided over the gate way of the Palace fortress"—T. C. M.

கோயிலின்சுற்றளவு கிழமேலடி 650, தென்வடலடி 295. கோயிலின் அமைப்பைக்காட்டும் படம் தனியே உள்ளது.

## 3. கோயிலின் படம்.



1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31
32
33
34
35
36
37
38
39
40
41
42
43

## கோயிலின் பட எண்கள் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1 | முன் கோபுரம் 7 கண்கள் | 24 | சப்தகன்னிகள், ரேணுகை |
| 2, 3, 4, 13 | மற்றகோபுரங்கள் 5 கண்கள் | 25 | சுவர்ண விநாயகர் |
| 5, 20 | விலகிய நந்திகள் | 26 | மகாலிங்கம் |
| 6 | ஞானவாவி | 27 | பாலமுருகன் |
| 7 | வன்னிமரம் | 28 | சண்முகர் |
| 8 | அனுக்ஞை விநாயகர் | 29 | ராமலிங்கம் |
| 9 | முருகன் | 30 | லட்சுமி |
| 10 | பசுமடம் | 31 | அறுபத்துமூவர் மண்டபம் |
| 11 | ஊஞ்சல் மண்டபம் | 32 | திருஞானசம்பந்தர், ராமர் படங்கள் |
| 12 | துர்க்கை சந்நிதி | 33 | நடராஜர் சந்நிதி |
| 14 | மடைப்பள்ளி | 34 | தபஸ் அம்மனும், கேணியும் |
| 15 | மூவர் சந்நிதி | 35 | பள்ளியறை |
| 16 | மதவாரணப்பிள்ளையார் | 36 | சூரியன் முதலியோர் |
| 17 | யாகசாலை | 37 | அம்மன் கோயில் |
| 18 | பைரவர் | 38 | கோவிந்த தீக்ஷிதரும் மனைவியும் |
| 19 | அலுவலகம் (Office) | 39 | சோமாஸ்கந்தர் |
| 21 | அலங்கார மண்டபம் | 40 | திருஞானசம்பந்தர் |
| | | 41 | கோடி தீர்த்தம் |
| 22 | மண்டபம் | 42 | மூலவர் பட்டீசர் |
| 23 | உள் மண்டப வாயில் | 43 | நந்தவனம். |

## 4. மூர்த்திகளின் பெயர்கள்.

இத்தலத்து விநாயகமூர்த்திகளுக்கு அனுக்ஞை விநாயகர், மதவாரணப்பிள்ளையார் என்னும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. காமதேனுவின் புத்திரி பட்டி வழி பட்டதால் மூலவருக்குத் தேனுபுரீஸ்வரர், பட்டீச்சரர், பட்டீச்சர், பட்டியப்பர் முதலிய பெயர்கள் வழங்கு கின்றன. கல்வெட்டில் பட்டீஸ்வர நாயஞர் என்னும் பெயர் காணப்படுகிறது. அம்மனுக்கு ஞானம்பிகை, பல்வளை நாயகி, பால்வளை நாயகி என்னும் பெயர்கள் வழங்குகின்றன. துர்க்கையம்மனுக்குக் கோட்டை வாயில் துர்க்கை என்னும் பெயர் வழங்குகிறது.

## 5. தீர்த்தங்கள்.

**ஞானவாவி :** உள் கோபுர வாயிலுக்கு வெளியே அனுக்ஞைவிநாயகர் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. இதில் வைகாசிப் பூரணை நாளில் நீராடிஞல் மிகவும் புண்ணிய முண்டு.

**கோடி தீர்த்தம் :** முதல் பிரகாரத்திலுள்ள கிணறு. இராமர் தன் வில்லின் முனையால் தோற்றுவித்து இறை வனுக்கு அபிஷேகம் செய்தது. இதற்கு கருட தீர்த்தம் என்றும் பெயர் உண்டு.

**தபஸ் கேணி :** தவஞ்செய்யும் அம்மன் சந்நிதிக்கு எதிரில் உள்ளது.

**திருமலைராஜன் ஆறு :** இது காவிரியின் கிளைநதி. ஊருக்குத் தெற்கில் ஓடுகிறது. 15-ம் நூற்றுண்டில் திருமலைராயன்பட்டினத்திலிருந்து அரசாண்ட திருமலை

ராஜனால் வெட்டுவிக்கப்பெற்றது. கோவிந்த தீக்ஷதர் இவ்வாற்றின் கரையில் வசித்திருக்கிருர். ஷியார் வசித்த மண்டபம் கிலமாயுள்ளது.

**தெப்பக்குளம்:** முன்கோபுர வாயிலுக்குக்கிழக்கில் உள்ளது.

**காயத்திரி குளம் ;** இது கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது. விசுவாமித்திர முனிவரால் உண்டாக்கப் பெற்றது. இத்தீர்த்தங்களில் நீராடிப்பெருமானை வழி படுவோர் வேண்டும் சித்திகளைப் பெறுவர்.

" அத்தடம் மூழ்கினார்க் கலகை நோயற
மெத்திய பகையற வினையின் வேரறப்
புத்திர செல்வமும் புகழும் வீரமும்
சித்தியும் முத்தியும் சோதல் திண்ணமே "

—செவ்வந்திப்புராணம்.

" மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

—தாயுமானவர்.

## 6. தலப்பெருமைகள்.

---

**சரித்திரப்பெருமைகள் :** முடிகொண்டசோழ புரம் என்னும் பழையாறையின் பிரிவுகளுள் ஒன்ருகப் பட்டீச்சரம் விளங்கியது. மற்றவை திருச்சத்திமுற்றம், வடதளி, திருமேற்றளி, சோழன்மாளிகை, சுந்தரப் பெருமாள்கோயில், தாராசுரம், முழையூர், வள்ளலார் கோயில் முதலியன. சோழன்மாளிகையைச் சுற்றிலும் 4 படையூர்கள் உள்ளன. மேற்கில் புதுப்படையூரும், கிழக்கில் ஆரியப்படையூரும், தெற்கில் பம்பப்படை யூரும், வடக்கில் மானப்படையூரும் உள்ளன. மழபாடி என்னும் பெயர் பட்டீச்சரத்துக்கு வழங்கியது.

**புராணப்பெருமைகள்:** இத்தலம் மிகவும் பழமையானது. நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. காமதேனுவின் புத்திரியாகிய பட்டியால் பூசிக்கப்பெற்றது. மாளவ தேசத்து தர்ம சர்மா என்ற அந்தணனுக்கு மேதாவி முனிவரின் சாபத்தால் ஏற்பட்ட நாய் வடிவம் இத்தலத்தில் உள்ள ஞான வாவியின் துளிபட்டமையால் ஷ்டி சாபம் நீங்கப் பெற்றது காம்பீலி நகரத்தரசஞன சித்திரசேன மகா ராஜன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்து புத்திரர்களைப் பெற்றது. சக்தியும்ன மகாராஜனுக்கு ஞானதீர்த்தத்தில் நீராடின மகிமையாலும், கிளியின் பஞ்சாட்சர உபதேசத்தாலும் பிரமஹத்தி தோஷம் நீங்கப்பெற்றது. விசுவாமித்திர முனிவருக்குக்காயத்திரி சித்திக்கப்பெற்று பிரம்மரிஷி பட்டம் பெற்றது. அனுமாரால் கொண்டு வரப்பட்ட லிங்கத்தை ஸ்ரீ இராமர் பிரதிஷ்டை செய்து தன் வில்லின் முனையால் கோடிதீர்த்தம் என்னும் கிணற்றைத் தோற்றுவித்து அந்நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்து, வாலியைக்கொன்றதனுல் ஏற்பட்ட சாய ஹத்தி தோஷம் நீங்கப்பெற்றது. மார்க்கண்டேயர் வழிபட்டது. திருஞானசம்பந்தருக்கு வெய்யல் வெப்பந் தணிய இறைவனுல் முத்துப்பந்தல் அளிக்கப்பெற்றது. கோவிந்த தீக்ஷதரால் அம்மன் கோயில் திருப்பணி செய்யப்பெற்றது. திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்றது. புனித இடங்களாகிய விருத்தாசலம், கமலாலயம், வெண்காடு, சாய்க்காடு, கைலாசம் இவைகளைப்போல் பட்டீச்சரமும் ஒன்ருகக் கருதப்படுகிறது. தேவியார் தவஞ்செய்து வழிபட்டது. சோழ அரசர்களாலும் பிற மன்னர்களாலும் வழிபடப்பெற்றது.

சத்திமுற்றப் புலவர் வாழ்ந்த இடம். மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் புராணம் பாடப் பெற்றது. இத்தலத்தில் துர்க்கை பூஜை மிகவும் சிறப் பாய் நடைபெறும்.

நந்தி விலகியது : திருஞானசம்பந்தர் முத்துப் பந்தரின் நிழலில் இத்தலத்துக்கு எழுந்தருளிவருகையில் இவ்வற்புதக்காட்சியைக் காணவும் தம்மைத் திருஞான சம்பந்தர் தரிசிக்கவும் ஆகப்பெருமான் நந்திதேவரை விலகியிருக்கும்படிகட்டளையிட்டார். அதன் அடையாள மாக எல்லா நந்திகளும் விலகியிருக்கின்றன. இவ்வாறே திருப்பூந்துருத்தியிலும் திருஞானசம்பந்தருக்காக நந்தி விலகியுள்ளது. திருப்புன்கூரில் நந்தனுருக்குக் காட்சி கொடுப்பதற்காக பெருமானருளால் நந்திவிலகியுள்ளது.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரப் பதி கத்தில் இத்தலத்தின் இயற்கைக் காட்சிகளையும், செழுமைகளையும், மாந்தரின் இயல்புகளையும் பற்பல தொடர்களில் காட்டுகிறுர். பதிகங்களில் பழையாறை மழபாடி பட்டிசரம் என்றுகூறுகிறுர். பழையாறையைச் சேர்ந்த மழபாடியிலுள்ள பட்டிச்சரம் என்பது. அத் தொடர்கள் பின்வருமாறு :—

“ நிழல்கூடு பொழில்சூழ் பழைசையுள் மாடமழ பாடியுறை பட்டிசரம், பாரின்மலிசீர்பழசை பட்டிசரம், கடியார்மறுகெலாம் மணநாறு பழையாறை மழபாடி, மண்ணின்மிசை நேரில் மழ பாடி மலிபட்டிசரம், வரையார் பருவமழை பண்கவர் செய்பட்டி சரம், பறையினெலி கீதமொடு பறையினெலி பெருகநிகழ் நட்டம் அமர்பட்டிசரம், கொடிவீதி அழகாயதொகு சீர்பட்டி சரம், கமழ்சேர் மடைக்கயல் வயல்கொள்மழபாடி நகர்நீடு பழையாறை, மந்தமலிசோலைமழபாடி நகர்நீடு பழையாறை ” என்பன.

பதிகத்தைப் பாடுவதால் உண்டாகும் பயன்களைப் பின்வருமாறு காட்டுகிறார் :-

" பட்டீசர மேத்தவினை பற்றழியுமே, பட்டீசரம் பரவுவார் விண்ணுலகாளுவர், பட்டீசரமருவுவார் இமையாரொடு உடனுதல் மேவல் எளிது, கழல்கள் தொழ உள்ளம் உடையாரை அடையா வினைகளே, இறைவனடி முறையினேத்துபவர் தீத் தொழில்களில்லர். பட்டீசரம் ஏத்தி எழுவார்கள் வினையேதுமிலர், அமரர் விண்ணுலகம் நண்ணல் எளிது. பட்டீசரமேயவனது ஈரடியுமேத்த எளிதாகு மேலுலகமே. பட்டீசர மேத்த வினை பற்றறுதலே, செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே " மேலும், திருஞானசம்பந்தர் பட்டீச்சரப் பெருமானின் தோற்றங்களை பல தொடர்களில் காட்டுகிறார். " கட்டரவினர், கொன்றைவிரிதார் கடவுள், நீறுபுனை மார்பன், செஞ்சடையினன், பால்மதியினன், படர்புன் சடையினன். வெள்விடையினன், இறைவன், நிரம்பா மதியினன், படைக்கொரு கரத்தன், பட்டீசர மேயவன் " என்பன.

## 7. திருப்பணிகள்.

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடிப் பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப்பார்க்கிலும் பழமையான கோயிலைப்புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத்தரும் என்பர்.

" புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழய தொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும் " என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

" மாதவர் மடங்களாதிவர தன்மந்திரங்களாதி நாதமாமி லிங்கமாதி நளினபுட்கரணியாதி சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறுபலன்தான் ஓதுமுன்செய்தோர் தம்மில் ஆயிரங் குணிதமோங்கும் "

—சிவபுண்ணியத்தெளிவு.

இக்கோயிலில் அவ்வப்போது பல திருப்பணிகள் நடைபெற்றுவந்துள்ளன. கல்வெட்டுக்களின்படி வீரப் பிரதாப தேவராயரின் காலத்தில் சகம் 1199-ல் பகுதானிய ஆண்டில் இக்கோயிலில் ஓர் மண்டபமும், ஓர் குளமும் கட்டப்பட்டுள்ளன. வீரதேவ மகாராயரின் காலத்தில் சகம் 1137-ல் தாது ஆண்டில் பட்டீச்சரத்தில் ஓர் கோயில் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. 16-ம் நூற்றுண்டில் இவ்வூரில் வசித்த கோவிந்த தீக்ஷிதர் அம்மன் கோயில் திருப்பணி செய்ததாகச் சொல்லப் படுகிறது.

1953-54-ல் கோயில் நிதியிலிருந்து சுமார் 3500 ரூபாய் செலவு செய்து ஞானவாவி தீர்த்தம் திருப்பணி செய்யப்பெற்றது. 1956-ல் பொது மக்களிடமிருந்து சுமார் 5000 ரூபாய் வசூல் செய்யப்பெற்றுத் துர்க்கை அம்மன் கோயில் திருப்பணி செய்யப்பெற்றது. இராஜ கோபுரத்திலிருந்து இரண்டாவது கோபுரத்திற்கும், ஞானதீர்த்தத்திற்கும், ஆக்ஞா கணபதி கோயிலுக்கும், தண்டபாணி கோயிலுக்கும், துர்க்கை கோயிலுக்கும், திருஞானசம்பந்தர் மடத்திற்கும் புதிதாக நடை பாதை சமீபத்தில் அமைக்கப்பட்டிருப்பதுடன் பழுதடைந்த ஊஞ்சல் மண்டபத்தை நன்கு திருத்தியமைத்து திரு ஞானசம்பந்தர் மடமாக மாற்றியமைக்கப்பட்டது. இப்போதும் தொடர்ந்து சில முக்கிய திருப்பணிகள் நடந்து வருகின்றன. கோயிலில் புதுப்பிரதிஷ்டையும், வேறு பல திருப்பணிகளும் செய்யவேண்டியிருப்பதால் அவைகளை நிறைவேற்றிவைக்கும் வகையில் அன்பர்கள் உதவி செய்வார்களாக.

## 8. சிற்பங்கள்.

கோயிலில் தூண்களும். மண்டபங்களும், மூர்த்தி களும் சிறந்த சிற்பங்களைக்கொண்டு விளங்குகின்றன. பட்டிப்பசு வழிபட்ட தன் அடையாளமாக ஓர் தூணில் பசு பூஜிப்பதைப்போன்ற சிற்பம் உள்ளது. மண்டபத் தூண்களில் சிங்கம் யாளியினுடையஉருவங்கள்உள்ளன. சில தூண்களில் சிங்கம் அடியில் பொறுத்தப்பெற் றுள்ளது. சுவர்களில் கருங்கல் பலகணிகள் உள்ளன. மடைப்பள்ளிச் சுவரில் பல நடன உருவங்கள் உள்ளன. மண்டபத்தூண்களில் சுப்பிரமணியர், பிக்ஷாடனர், வீரபத்திரர், முதலியோருடைய சிற்பங்கள் உள்ளன, கோபுர வாயில்களில் விநாயகர் உருவங்கள் உள்ளன. பரசுராமர் வழிபட்டதற்குப்பரசுராமர் உருவம் உள்ளது. சோழன்மாளிகையிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர், சண்முகர், பைரவர், துர்க்கை ஆகியோரின் சிலைகள் சிற்பம் பொருந்தியன. இக்கோயிலுக்கு 5 கோபுரங்கள் உள்ளன. முன் கோபுரம் 7 கண்களையும் மற்றவை 5 கண்களையும் கொண்டவை. அம்மன் கோயில் மண்டபத்தில் மேல் விட்டத்தில் கல் சங்கிலி களும், பாம்புகளும் பொருத்தப்பெற்ற சித்திரங்கள் அமைத்த ஓர் வட்டக்கல் சுழலும் நிலையில் அமைக்கப் பட்டுள்ளது. அம்மன் கோயில் உள் மண்டபத்தில் திருப்பணி செய்த கோவிந்த தீக்ஷதர், அவர் மனைவியார் இவர்களுடைய சிலைகள் உள்ளன. சுவாமி கோயில் பிரகாரத்திலுள்ள ஓர் குகையிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன் நடராஜர், சோமாஸ்கந்தர், இலட்சுமி, ஆகி யோரின் உற்சவச்சிலைகள் எடுக்கப்பட்டன. அவைகள் மிகவும் சிற்பம் பொருந்தியனவாயும், வசீகரமாயும்

இருந்தமையால் தஞ்சாவூர் கலைக்கூடத்தில் (Art Gallery) வைக்கப்பட்டுள்ளன. முதல் பிரகாரத்தில் மிகப்பழமையான ராமர் படம் உள்ளது.

## 9. கல்வெட்டுக்கள்.

இக்கோயிலில் சில கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் 1908-ல் சர்க்காரால் நகல் எடுக்கப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. உள் கோபுர வாயிலிலும் சில கல்வெட்டுக்கள் உள்ளன, அவைகளின் விபரம் வருமாறு:-

1. (21 G-1908) வீரப்பிரதாப தேவராயரின் ஆட்சிக்காலத்தில் சகம் 1199 – பகுதானிய ஆண்டில் பட்டீச்சரத்தில் ஓர் குளமும், ஓர் மண்டபமும் கட்டுவித்ததற்கும், பட்டீஸ்வர நாயனுருக்கு 4-மா 3-காணி நிலங்கள் தானம் செய்ததற்கும் ஏற்பட்ட குறிப்பு.

2. (21 H-08) வீரதேவ மகாராயர் காலத்தில் சகம் 1137 – தாது ஆண்டில் பட்டீச்சரப் பெருமானுக்கு ஓர் கோயில் கட்டுவித்ததற்கும், கோயிலைச்செப்பனிடுவதற்காக சண்டோல்புரம் கிராமத்திலுள்ள 9½-வேலி நிலங்கள் கொடுபட்டதற்கும் ஏற்பட்ட கல்வெட்டுக் குறிப்பு.

3. “இக்கோயிலில் 5 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டாம் கோபுரத்தின் உட்புறம் இருக்கும் கல்வெட்டு தஞ்சை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டதாகும். அது அவ்வூரில் திருமணம் நிகழும்போது தாம்பூலத்தை முதலில் அவ்வூரினர்களாகிய செட்டியார்கள், பட்டுநூல்காரர்கள் இவர்களுள் எவருக்கு முதலில்

கொடுப்பது என்ற தகராறு ஏற்பட்டது. முடிவில் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மனுக்கு ஒரு புடவையும், வெற்றிலை பாக்கையும் முதலில் கொடுத்து விட்டு பின்னர் அவ்விருவகுப்பாரும் எடுத்துக்கொள்வது என்னும் முடிவுபற்றியதாகும். கிரந்தத்தில் உள்ள கல் வெட்டுகோயிலைப்பழுது பார்ப்பதைப்பற்றிக்கூறுகிறது. கிரந்தத்தில் உள்ள இரண்டு செய்யுட்கள், புனித இடங்களாகிய விருத்தாசலம், கமலாலயம், வெண்காடு, சாய்க்காடு, கைலாசம் இவைகளைப்போல் பட்டீச்சரமும் ஒன்று என்று குறிப்பிடுகின்றன. வெளிப்பிரகாரத்தில் ஸ்ரீ பலிபீடத்தின் அடிப்பகுதியிலுள்ள கல்வெட்டு திருஞானசம்பந்தர் மடம் திருநாவுக்கரசு மடம், திருமூல தேவர்திருமடம் இவைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.''

—திருஞானசம்பந்தர் திருமுறை.

## 10. தினப்பூஜையும், திருவிழாக்களும்.

இக்கோயிலில் தினந்தோறும் விடியற்காலையில் 7 மணிக்கும், காலை 9 மணிக்கும், உச்சியில் 12 மணிக்கும், மாலை 6 மணிக்கும், இரவில் 8 மணிக்கும், 9 மணிக்கும் ஆக ஆறு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும். அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுவதால் மிக்க புண்ணியம் உண்டு.

**'' காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேளைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரமெல்லாம்விடும் ''**

—சிவதரிசன மகத்துவம்.

மேலும் பிரதோட காலத்திற்சென்று சிவதரிசனம் செய்வது மிகவும் விசேடம். பிரதோட காலமாவது வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வரும் திரயோதசி திதிகளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும், பின்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையுங் கொண்ட காலம். சிவபெருமான் ஆலகால விஷம் உண்டருளிய காலம் என்பர்.

"வாழிய இருபக்கத்தும் வளர்திரயோதசிக்கண்
ஆழியிற் கதிரோன்வீழும் அதற்குமுன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னுமந்த நாழிகைஇணைய காலம்
பாழியங்கடல் சூழ்வைப் போர்பகர் **பிரதோடம்** என்பார்"

—மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

1. **விசாக விழா :** வைகாசி மாதம் விசாக நட்சத்திர நாளில் காலையில் பஞ்சமூர்த்திகள் வாசனங்களில் ஊர்வலமாகப் புறப்பட்டு திருமலைராஜன் ஆற்றிற்குச்சென்று தீர்த்தங்கொடுத்து அங்கிருந்து இரவில் மூர்த்திகள் விமானங்களில் புறப்பட்டுக் காட்சி கொடுத்துக் கோயிலுக்கு வந்துசேரும்.

2. **முத்துப் பந்தல் விழா :** ஆனி மாதம் முதல் தேதியில் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் பூத கணங்கள் மூலம் முத்துப்பந்தல் அளிக்கும் விழா நடைபெறும். இதுவே இத்தலத்தின் சிறப்பு விழா. இதற்கு முன் இரண்டு நாட்களில் திருஞானசம்பந்தருக்குத் திருமுலைப்பால் அளித்தல், முத்துச்சிவிகை, முத்துக் குடை கொடுத்தல், பொற்றாளம் தருதல், முத்துச் சின்னங்கள் அருளுதல், திருஞானசம்பந்தர் ஓடம் விடுதல் முதலிய விழாக்கள் நடைபெறும். திருஞான சம்பந்தருக்கு வெவ்வேறு தலங்களில் நிகழ்ந்த

நிகழ்ச்சிகளை இத்தலத்தில்விழாக்களாகநடத்துகிருர்கள். திருஞானசம்பந்தருக்குச் சிவபிரானருளால் ஆங்காங்கு கிடைத்த நலங்கள் :—

சீர்காழியில் திருமுலைப்பால் உண்டது. திருக் கோலக்காவில் ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற் ருளங்கள் பெற்றது. திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் பெற்றது. திருஆவடுதுறையில் பொற்கிழி பெற்றது. திருக்கொள்ளம்புதூரில் திருஞானசம்பந்தர் ஓடம் விட்டது. பட்டீச்சரத்தில் முத்துப்பந்தல் பெற்றது.

" இருந்தண் புகலி கோலக்காஎழில் ஆவடுதுறைசீர்
பொருந்தும் அரத்துறை போனகந்தாளம் நன்பொன்சிவிகை
அருந்திடவொத்த முத்தீசெய வேறஅரனளித்த
பெருந்தகைசீரினை எம்பரமோநின்று பேசுவதே "

" கொள்ளம்புதூர்க்குழகன் நாவாய் அதுகொடுப்ப
உள்ளமே கோலாக ஊன்றினுன் "

—நம்பியாண்டார் நம்பி.

முத்துப்பந்தல் விழா நாளில் பகல் 12-மணிக்குத் திருஞானசம்பந்தர் அடியார்களுடன் திருச்சத்திமுற்றம் கோயில் சந்நிதியிலிருந்து முத்துப்பந்தலின் நிழலில் எழுந்தருளிப்பட்டீச்சரத்துக்கு வருதலும், பதிகம் பாடுதலும், திருமடத்துக்கு எழுந்தருளுதலும் ஆகிய காட்சிகள் நடைபெறும். அன்றிரவு திருஞானசம்பந்தர் முத்துப்பந்தலிலும், ஸ்ரீஞானம்பிகைசமேத பட்டீச்சரப் பெருமான் முத்து விமானத்திலும் எழுந்தருளித் திரு வீதியில் உலாவந்து காட்சிகொடுப்பர். இக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாக விளங்கும்.

3. **மார்கழி விழா :** மார்கழி அமாவாசை நாளில் பஞ்சமூர்த்திகள் பல வாகனங்களில் புறப்பட்டு வீதி வலம் வந்து கோடி தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுக்கும். இராமருக்கு ஏற்பட்ட சாயஹத்தி தோஷம் கொலைக் குற்றம் நீங்கப்பெற்ற ஐதீகத்தின் காரணமாக இவ்விழா நடைபெறுகிறது.

4. **மாத விழாக்கள் :** சித்திரைப்பூரணை நாளில் அபிஷேக ஆராதனைகள் நிகழும், ஆனியில் நடராஜர் திரு மஞ்சனமும், ஆடிப்பூர நாளில் அம்மன் புறப்பாடும், ஆவணியில் நடராஜர் அபிஷேகமும், விநாயக சதுர்த்தி யில் அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். ஆவணி மூலத்தில சுவாமி புறப்பாடு உண்டு. புரட்டாசியில் நடராஜர்அபிஷேகமும், நவராத்திரிவிழாவும், 10-ம்நாள் விஜயதசமி நாளில் அம்மன் புறப்பாடும் நடைபெறும். ஐப்பசியில் அன்னபிஷேகமும், கந்தர் சஷ்டி நாட்களில் சுப்பிரமணியர் புறப்பாடும் நடைபெறும். கார்த்திகை சோமவார நாட்களில் அபிஷேகமும் திருக்கார்த்திகை நாளில் சுவாமி புறப்பட்டுச் சுடலை கொளுத்தப்படும். மார்கழித்திருவாதிரை நாளில் நடராஜருக்கு அபிஷே மும் புறப்பாடும் நிகழும். தை மாதம் பொங்கல் நாளில் ஆராதனையும், பூசநாளில் சந்திரசேகரர் புறப்பட்டுத்தீர்த் தங்கொடுக்கும். மாசிமக நாளில் அபிஷேகமும், மகா சிவராத்திரி நாளில் இரவில் நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். பங்குனி உத்தரநாளில் அபிஷேக ஆராதனைகள் நிகழும். துர்க்கை அம்மன் கோயிலில் மூல அம்மனுக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பெற்று உற்சவ அம்மன் விசேட அலங்காரத்துடன் வீதியுலா வரும். துர்க்கையம்மன்

மிகவும் சத்தியுள்ள தேவதையாய் விளங்குவதால் வெளி யிடங்களிலிருந்தும் பலர் வந்து தரிசித்துச் செல்வர்.

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினல் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல் "

என்னும் பெரியபுராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும் பெருமானுக்கு நடைபெறும் திரு விழாக்களைக்கண்டு தரிசித்து வேண்டும் நலன்களைப் பெறுவார்களாக.

## 11. கோயில் தரிசன முறை.

கோயிலுக்குச் செல்வோர் நீராடி சிவ சின்னங்கள் ஆகிய திருநீறு உருத்திராக்கம் அணிந்து, தேங்காய் பழம் கற்பூரம் முதலியவற்றில் இயன்றளவு எடுத்துச் செல்லவேண்டும். முதலில் விநாயகரையும், சிவபிரானை யும், பிறகு நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர், சமய குரவர் நால்வர், அறுபத்துமூவர் முதலியோரையும் பிறகு தேவியாரையும் சண்டிகேஸ்வரரையும் முறையாகத்தெரிசிக்கவேண்டும்.

**கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்:** மலசலங் கழித்தல், எச்சில் உமிழ்தல், சூதாடுதல், ஆசாரமில்லாது செல்லுதல், வீண்வார்த்தை பேசுதல், அவசரமாக வலம் வருதல், நந்திதேவருக்கும், சிவபெருமானுக்கும் குறுக்கே போதல், நிர்மாலியப்பொருள்களை மிதித்தல் முதலியன.

## 12. வருமானமும், சொத்துக்களும்.

இக்கோயிலுக்குச் சுமார் 44 ஏகர் 83 செண்ட் நன்செய் நிலங்களும், 114 ஏக்கர் 45 செண்ட் புன்செய் நிலங்களும் உள்ளன. இவைகள் கும்பகோணம் தாலூகா பட்டீச்சரத்திலும், பாபநாசம் தாலூகா கோவிந்தகுடி கிராமத்திலும் உள்ளன. இவைகளின் குத்தகை மூலமாயும், மனை வாடகை, உண்டியல் மூல மாயும் ஆண்டுதோறும் சுமார் பதினாலாயிரம் ரூபாய் வருமானம் வரும். அரசியலார் மோகினித் தொகையாக ரூ. 284—5—8 கொடுக்கிறார்கள். சுமார் எண்ணாயிர ரூபாய் மதிப்புள்ள நகைகள் உள்ளன.

## 13. நிர்வாகம்.

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 7—8—1945-ல் (Scheme) திட்டம் ஏற்பட்டு அதிலிருந்து சென்னை அறநிலையப்பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற (1) ஸ்ரீ V. S. ராஜகோபால் நாயுடு, (2) ஸ்ரீ M. N. G. ராஜமன்னார் செட்டியார், (3) ஸ்ரீ P. S. அமிர்தலிங்கம் பிள்ளை, (4) ஸ்ரீ T. R. ஆறுமுகம் பிள்ளை, (5) G. சுந்தரராஜ வன்னியர் என்ற ஐந்து கௌரவ அறங்காவலர்களும் (Trustees) நிர்வாக அதிகாரி **ஸ்ரீ T. ஞானப்பிரகாசம் பிள்ளையும்**, கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 14. புராண வரலாறுகள்.

பக்தி மார்க்கத்தில் நின்று பரமன் அருளைப்பெற்ற முன்னோர் பலருடைய பழய வரலாறுகளாகிய புராணங்கள், பின்வழியினராகிய மற்றையோரும் அவனருளைப் பெறுவதற்குச் சாதனங்களாக வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இனிப்புப்பொருளில் மருந்தை உள்ளடக்கித் தருவதுபோலப் பல்சாத்திரங்களின் உண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதை வடிவங்களாக ஆன்றோர்கள் புராணங்களை அமைத்தனர். அவ்வரலாறுகளைப்படிப்பதால் அவைகளில் அடங்கிய உண்மைகளை கைக்கொண்டு முன்னோர்கள் சென்ற மார்க்கங்களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவுகின்றன.

இத்தலத்தின்பெருமைகளைப்பற்றிக்கூறும்படியான இரண்டு புராணங்கள் உள்ளன. பட்டீஸ்வர மான்மியம் என்னும் நூலிலிருந்து தமிழ் உரை நடையில் மொழி பெயர்க்கப்பட்ட ஓர் புராணம் உள்ளது. 12 அத்தியாயங்களையுடையது, சவுனகர் முதலிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் எடுத்துக்கூறியதாகச் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் பட்டீச்சரம் ஆறுமுகத்தா பிள்ளையின் வேண்டுகோளின்படி திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்ச் செய்யுளில் பாடிய பட்டீச்சரப்புராணம் ஒன்றுள்ளது. இந்நூல் முற்றும் கிடைக்கவில்லை. 38 பாடல்களே உள்ளன. கடவுள் வாழ்த்துப்பாடல்களும், நாட்டுப்படலத்தில் சில பாடல்களும் உள்ளன. அவைகளைத்தழுவிச் சில முக்கிய வரலாறுகள் சுருக்கமாகக் கூறப்படும்.

## 1. பட்டியும், தேவியும் வழிபட்டது.

பராசக்தியானவள் தனித்துச் தவஞ் செய்வதற்கு இத்தலத்திற்கு வந்து ஓர் வனம் அமைத்துத் தவஞ் செய்தாள். தேவர்கள் மரம் செடி கொடிகளின் வடிவந் தாங்கி உதவி செய்தார்கள். தேவியின் தவத்திற்கு உதவ வேண்டிக் காமதேனுப்பசு தன் புத்திரி பட்டியை இவ் விடத்திற்கு அனுப்பியது. பட்டிப்பசு இவ்வனத்தை அடைந்து தேவியின் தவத்திற்கு உதவியான பணிவிடைகள் செய்தது. தேவியாரின் தவத்திற்கு உவந்து பெருமான் தமது சடைமுடியுடன் காட்சி கொடுத்தார். அதனுல் பெருமானுக்குக் கபர்த்தீஸ்வரர் என்ற பெயர் உண்டாயிற்று.

இவ்வனத்தின் பெருமையையும் தூய்மையையும் பட்டி உணர்ந்து தானும் பெருமானைப் பூசிக்க விரும்பி மணலினுல் ஓர் லிங்கம் அமைத்து நாள்தோறும் விதிப்படி பூசித்து வந்தது. தனது தூய்மையான பாலைக் கொண்டும், ஞானவாவியின் நீரைக்கொண்டும் நீராட்டி வழிப்பட்டது. பெருமான் அவ்வழிபாட்டிற்கு மகிழ்ந்து மணலினுல் ஆகிய லிங்கத்தில் என்றும் நிலையாய் அமர்ந் தருளினுர். தேவியார் தவஞ் செய்ததால் தேவிவனம், சத்திவனம் என்றும், பட்டிக்கன்று வழிப்பட்டதால் பட்டீச்சரம் என்றும், பெருமானுக்குப் பட்டீச்சரர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

## 2. இராமர் வழிபட்டது.

தசரதர் புதல்வரான இராமர் இலங்கையில் சிறைப் பட்டிருந்த சீதையை மீட்கவேண்டி இராவணனுடன்

N58

போர் புரிந்து அவனைக்கொன்று வெற்றி பெற்றார். இராவணனைக் கொன்ற குற்றம் நீங்கும்படி தாம் ஒரு லிங்கத்தையும் அனுமாரால் கொண்டு வரப்பெற்ற லிங்கத்தையும் சேதுவில்பிரதிட்டைசெய்துவழிபட்டார். பிறகு அயோத்திக்குச்செல்லும் வழியில் பட்டீச்சரமாகிய இத்தலத்தை அடைந்து அனுமார் கொண்டு வந்த மற்றோர் சிவலிங்கத்தைத்தாபித்துப் பக்கத்தில் தன் வில்லின் முனையால் ஓர் கிணற்றைத் தோற்றுவித்து அதன் நீரால் பெருமானுக்கு அபிஷேகம்செய்து வழிபட்டார். இதனால் இராமருக்கு இராவணனைக்கொன்றதால் ஏற்பட்ட பிரமகத்திதோஷம் நீங்கப்பெற்றுத் தன்னாடுசென்று பலகாலம் வாழலானார். இத்தலத்தில் இராமர் பிரதிட்டை செய்த லிங்கம் இராமலிங்கம் என்றும், அவரால் உண்டாக்கப்பெற்ற கிணறு கோடி தீர்த்தம் என்றும் பெயர்பெறும். கோயிலில் பழமையான இராமர் படம் ஒன்று உள்ளது. இராமர் வழிபட்ட ஐதீகமாகமார்கழி மாதம் அமாவாசை நாளில் திருவிழா நடைபெறுகிறது. அன்றைக்குப் பஞ்சமூர்த்திகள் புறப்பட்டுக் கோடி தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுக்கும்.

112825

### 3. தர்மசர்மா சாபம் நீங்கப்பெற்றது.

மாளவ தேசத்தில் தர்மபுரம் என்னும் ஊரில் மேதாவி முனிவர் தவஞ் செய்து வந்தார். அவரிடம் பல மாணவர்கள் பயின்றுவந்தனர். ஒருநாள் பிரசேதஸ் என்ற முனிவர் தாம் செய்யும் யாகத்துக்கு வரும்படி சில மாணவர்களை மேதாவி முனிவரிடம் அனுப்பினார். முனிவரும் யாகத்துக்குப் புறப்படுவதற்குமுன் தர்மசர்மா என்னும் மாணவனை அழைத்து பர்ணசாலையையும் அதி

லுள்ள பொருள்களையும், பசுக்களையும் பாதுகாக்கும்படி கட்டளையிட்டுப் பிரசேதஸ் முனிவரின் யாகத்துக்குச் சென்று நடத்தி உரிய உபசாரங்களைப் பெற்றுத் திரும்பினர். தன் கட்டளைப்படி தர்மசர்மா பசுக்களுக்குச்சரிவர உணவு கொடுத்துப் பாதுகாக்காமல் இருந்த தால் பசுக்கள் மெலிந்தும், அழகிழந்தும், பால் சுருங்கியும் காணப்பட்டன. இதைக்கண்ட மேதாவி முனிவர் கோபங்கொண்டு தர்மசர்மாவை நாயின் உருவடையும்படி சபித்தார். மாணவன் முனிவரைவணங்கித்தன்னை மன்னிக்கவேண்டினன். மேதாவி முனிவர் அவனிடம் காவிரியின் தென்கரையிலுள்ள தேவி வனத்தை அடைந்து ஞானவாவிக்கரையிலுள்ள வன்னிமரத்திற்குச் சென்றால் நாயின் வடிவம் நீங்கும் என்றார். நாய் வடிவம் பெற்றவன் பல இடங்களையும் கடந்துவரும் போது காலவ முனிவரும் தர்மசர்மாவுக்கு மேதாவி முனிவர் கூறியவாறே உபதேசித்தார். நாயுருக்கொண்ட தர்மசர்மா, முனிவர் கூறியபடியே தேவிவனமாகிய பட்டீச்சரத்துக்கு வந்து வன்னி மரத்தடியில் நின்றன். அப்போது ஞானவாவியில் நீராடிய பெரியோர்களின் சடையிலிருந்துதெறித்தநீர் அந்நாயின்மேற்பட்டவுடன் தர்மசர்மா தன் பழய வடிவம்பெற்று ஞானவாவியில் மூழ்கி அம்மையப்பரை வணங்கி வாழ்த்திச் சென்றன்.

## 4. சித்திரசேனன் வரலாறு.

காம்பீலி நகரத்தில் சித்திரசேனன் என்னும் அரசன் கல்வி, கேள்வி நல்லொழுக்கம் உடையவனுய் ஆண்டு வந்தான். ஒருநாள் வேகவதி ஆற்றங்கரையில் கூடியிருந்த முனிவர்களிடம் சென்று தனக்குப்புத்திரப்பேறு

இல்லாமையைக்கூறி அருள்புரியும்படி வேண்டினன். அவர்களுள் அரிதகன் என்னும் முனிவர் அரசனிடம் அவன் முற்பிறவிகளில் பல பாவங்களைச் செய்ததால் புத்திரப்பேறு இல்லையென்றும், மனைவியருடன் பட்டீஸ் வரம் சென்று ஞானவாவியில் நீராடி வன்னி மரத்தடியில் பிரம்மஞான மந்திரத்தையும் குமார மந்திரத்தையும், செபித்துப் பெருமானை வழிபட்டால் நற்புத்திரப்பேறு உண்டாகும் என்றும் உபதேசித்தார். முனிவர் கூறிய படியே சித்திரசேனன் தன் மனைவியருடன் அமைச்சர் முதலிய பரிவாரங்கள்சூழப் புறப்பட்டுப் பலதலங்களைத் தரிசித்து இத்தலத்துக்கு வந்து தங்கி ஞானவாவியில் நீராடிப் பெருமானையும் தேவியையும் வழிபட்டான். புத்திரகாமேஷ்டி யாகம் செய்யத்தொடங்கிப் பல முனி வர்களைத் துணையாகக்கொண்டு நடத்தினன். பட்டீசப் பெருமான் அழகிய ஒளி உருவத்துடன் தோன்றி அரச னிடம் ஓர் அருமையான மருந்தைக்கொடுத்து மனைவி யார் உண்ணும்படி செய்தால் நல்ல புதல்வர் உண்டாவர் என்று கூறி மறைந்தருளினர். பெருமான் காட்சி தந்த நாள் வைகாசிப்பூரணை நாளாகும். சித்திரசேனன் பெருமான்அருளியமருந்தை மனைவியாருக்குக்கொடுத்து உண்ணும்படி செய்தான். பெருமானருளால் பேரழகும் நற்குணமும் வாய்ந்த புதல்வர்களை மனைவியர் மூலம் பெற்றெடுத்தான். அரசன் தனக்குப் புத்திரப்பேறு கிடைத்த மகிழ்ச்சியால் பெருமானுக்கும் அடியார்களுக் கும் பல பொருள்களை வழங்கினன். பெருமானுக்குத் திருவிழா நடத்த எண்ணி தை-மாதம் உத்திரட்டாதியில் கொடியேற்றிப் பத்து நாள் வரையில் காலையிலும் மாலை யிலும் பெருமானை உலா வரச்செய்தான். புனர்பூசத்தில் தேரோட்டமும், பூசநாளில் தீர்த்தவாரியும் நடத்தினன்

இவ்வாறு சித்திரசேனன் திருவிழாக்களை நடத்தி மனைவி மக்களுடன் தன்னுடு சென்று பலகாலம் அரசாண்டு முத்தி அடைந்தான்.

## 5. சத்தியும்னனும் கிளியும்.

இத்தலத்தில் மதவல்லி என்னும் கணிகைப்பெண் கந்தர்வ விந்தையால் பட்டீசரை வழிபட்டு வந்ததுடன் ஓர் கிளியை வளர்த்து அதற்குச் சிவமந்திரங்களையும், தோத்திரங்களையும் கற்பித்து வந்தாள். கிளியும் இறைவன்சந்நிதியில்சிவநாமங்களையும்,மந்திரங்களையும் சொல்லிவந்தது. பெருமானும் கிளியின் தொண்டுக்கு மகிழ்ந்தார். மாசி மாதத்தில் சிவராத்திரி நாளில் அக் கணிகை ஞானவாவியில் படிந்து நீராடி பெருமானை வழிபட்டுச் சிவபதம் அடைந்தாள். கிளியும் தன் தொண்டைச்செய்து வந்தது.

அக்காலத்தில் சத்தியும்னன் என்னும்அரசன் பிரம்ம கத்தி தோஷம் பிடித்தவனுய் காசிப முனிவரை அடைந்து தன் குறையை முறையிட்டான். முனிவர் அரசனிடம் காவிரியின் தென்கரையிலுள்ள பட்டீச்வரம் சென்று ஞானவாவியில் நீராடி ஐந்தெழுத்தை ஜெபித்து பெருமானை வழிபட்டு வந்தால் துன்பம் நீங்கும் என்று உபதேசித்தார். அரசனும் அவ்வாறே இத்தலத்துக்கு வந்து ஞானவாவியில் நீராடிச் சந்நிதியிலுள்ள கிளியினுல் பஞ்சாட்சர உபதேசம்பெற்றுப் பலமுறை ஜெபித்துப் பெருமானையும், தேவியையும் வழிபட்டுப் பிரம்மகத்தி தோஷம் நீங்கப்பெற்றுன்.


"அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெலாஞ் சொல்லிச்
சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே"

—தாயுமானவர்.


(புராணச்சார்பான மற்றவரலாறுகளின் குறிப்புகள் தலப்பெருமைப் பகுதியில் கூறப்பெற்றுள்ளன.



முத்துப்பந்தல் திருவிழாவின்போது
ஸ்ரீ சம்பந்தமூர்த்திசுவாமிகள் ஓடத்தில் எழுந்தருளும் காட்சி



முத்துப்பந்தல் திருவிழாவின்போது
ஸ்ரீ சம்பந்தசுவாமிகள் ராஜகோபுரவாயிலிலிருந்து புறப்படும் காட்சி



முத்துப்பந்தல் திருவிழாவின்போது
ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமி முத்துப்பந்தலின்கீழ் வரும் காட்சி



முத்துப்பந்தல் திருவிழாவின்போது
ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் பேரழகுவாய்ந்த
முத்துவிமானத்தில் எழுந்தருளும் காட்சி

## 6. திருஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தல் அளித்தது.

திருஞானசம்பந்தர் திருவலஞ்சுழியை வணங்கிப் பழையாறைப்பதியை வணங்குதற்கு அடியார்களுடன் நடந்துசென்று வழியிலுள்ள ஆறைமேற்றளித்தலத்தை வணங்கியபின், தேவியார் வழிபட்ட திருச்சத்திமுற்றத் திற்கு வந்து பெருமானை வழிபட்டார். பிறகு பக்கத்தி லுள்ள பட்டீச்சரம் சென்று வணங்குவதற்கு அடியார் களுடன் புறப்பட்டார். அப்போது சூரியன் மிதுன ராசியிற் பிரவேசிக்கின்ற முதுவேனிற் காலமானதால் வெய்யிலின் கொடிய வெப்பத்தைத் தணிக்கப் பட்டீசப் பெருமான் திருஞானசம்பந்தருக்குப் பூதகணங்கள் மூலமாய் அழகிய முத்துப்பந்தலை அனுப்பிவைத்தார். பூதகணங்கள் தாங்கிச்சென்று திருஞானசம்பந்தருக்குத் தெரியாதபடி அவரது திருமுடிக்குமேல் முத்துப்பந்தலை பிடித்துப் பெருமான் அருளியதையும் கூறினர். சம்பந்தர் இறைவன் திருவருளைவியந்து, பணிந்து போற்றி முத்துப் பந்தலின் நிழலில் வந்தார். தேவர்கள் பூமழை பொழிந்த தால் முத்துப்பந்தல் பூப்பந்தல்போலக்காட்சியளித்தது. முத்துப்பந்தலின் நிழல், அம்பலத்தில் பெருமான் தூக்கிய திருவடி நிழல் போல் விளங்கியது. தொண்டர் கூட்டம் ஆரவாரஞ்செய்யவும், மறைகளின் முழக்கம் ஓங்கி எழவும், அடியார் கூட்டம் எதிர்கொள்ளவும் திருஞானசம்பந்தர் அழகிய முத்துப்பந்தலின் நிழலில் பட்டீச்சரத்துக்குவந்தார். அப்போதுஇவ்வற்புதக்காட்சி யைக்காணவும், தம்மைத்திருஞானசம்பந்தர்தரிசிக்கவும் பெருமான் நந்திதேவரை விலகும்படிக் கட்டளையிட

நந்தியும் விலகியது. இதன் காரணமாக முன் கோபுரத்தை அடுத்துள்ள நந்தியும், உள் மண்டபத்திலுள்ள நந்தியும் விலகியுள்ளன. திருஞானசம்பந்தர் கோயிலின் உள்ளே புகுந்து வலம் வந்து பட்டீசுரரின் திருவடித் தாமரை மலர்களைத் தரிசித்துப் பூமியில் வீழ்ந்து வணங்கி "பாடல் மறை" என்று தொடங்கும் பாமாலை பாடித் திருவருள் திறத்தை வியந்து ஆனந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கிப் பேராத பெருங்காதலுடன் திருக்கோயிலின் புறத்தே வந்து தங்கியிருந்தார்.


இந்த முத்துப்பந்தல் விழா ஆண்டுதோறும் ஆனி மாதம் முதல் தேதியில் சிறப்பாக நடைபெறுகிறது.

## 7. கோவிந்த தீக்ஷதர் வரலாறு.

கோவிந்த தீக்ஷதர் என்பவர் கி. பி. 1542-ல் தஞ்சையை ஆண்டுவந்த அச்சுதப்ப நாயக்கரிடம் மந்திரியாய் இருந்தார். சிறந்த சிவபக்தர். அரசரிடத்தும் மக்களிடத்தும் அன்பு கொண்டவர். வடமொழி, தென்மொழிப்புலவர்களையும், சங்கீத வித்வான்களையும் ஆதரித்தவர். பல கோயில் திருப்பணிகளைச்செய்தவர். இவர் பட்டீச்சரத்தில் திருமலைராஜன் ஆற்றங்கரையில் ஓர் மாளிகையில் வசித்துக்கொண்டு அம்மன் கோயில் திருப்பணி செய்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் வசித்த மாளிகையின் அடையாளங்கள்உள்ளன. மேலும் இவர் அரசருடைய ஆதரவில் கும்பகோணத்தில் மகாமகக்குளத்தைப் புதுப்பித்து, அதைச் சுற்றிலுமுள்ள சோடச லிங்க மண்டபங்களை (16 மண்டபங்களை)க் கட்டுவித்தார். திருநாகேஸ்வரம் ஸ்ரீநாகநாதர் கோயிலில் ஓர் மண்டபத்தைக் கட்டுவித்தார். திருவையாறு,



கோவிந்த தீக்ஷிதரும் அவர் பத்தினியும்



ஸ்ரீ ஆறுமுகக்கடவுள்.

கும்பகோணம், திருவிடமருதூர், திருவலஞ்சுழி முதலிய இடங்களில் புஷ்ய மண்டபங்களைக் கட்டுவித்ததாகக் கூறுவர். இவரை மந்திரி ஐயன் என்றும், குரு ஐயன் என்றும் கூறுவர். இவர் பெயரால் ஏற்பட்ட இடங்கள் அய்யன்பேட்டை, அய்யன் தெரு, அய்யன் கடை, அய்யன்வாய்க்கால், குருவையன்குளம் என்பன. இவை தஞ்சாவூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் உள்ளன. திருச்சியில் குருவையன் குளம், குருவியங்குளமாகி, அது தற்போது பூங்காவாக உள்ளது. இவர், இவர் மனைவியாருடைய உருவச்சிலைகள் கைகுவித்தவண்ணம் பட்டீச்சரம் அம்மன் கோயிலில் உள்ளன. கும்பகோணம் ஸ்ரீ கும்பேஸ்வரர் கோயிலில் லிங்கவடிவமாய் உள்ளனர்.

## 8. பட்டீச்சரம் ஆறுமுகத்தா பிள்ளை.

இவர் பட்டீச்சரம் நமச்சிவாயம் பிள்ளையின் புதல்வர். தமிழ் புலவர்களிடத்தில் மிகவும் அன்பு உடையவர். "காமேவு கொடைத்தடக்கைச் சைவ சிகாமணி" என்று புகழப்பட்டவர். இவர் மாயூரத்திலிருந்த திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைத் தமது இல்லத்திற்கு அழைத்துவந்து உபசரிப்பது வழக்கம். மகாவித்வானும் அடிக்கடி பட்டீச்சரம் வருவதுண்டு. ஆறுமுகத்தாபிள்ளையின் வேண்டுகோளின் படியே பட்டீச்சரப்புராணம் மகாவித்வானால் இயற்றப் பெற்றது.

" திருவுலகர் மகிழ்தரக்கொள் ஆறுமுகபூபாலன்
சிறப்பிற்கேட்ப, பொருவுதகிர் பட்டீசமான்மியத்தைச்
செந்தமிழாற் புனைதல்செய்தான் " என்பது புராணவரிகள்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் பலர் பாடம் பயின்று வந்தனர், அவர்களுள் முக்கியமானவர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ஆவர். இவர் மகா வித்வானிடம்

மாயூரப் புராணம் படித்து வந்தார். ஒருநாள் ஆறுமுகத்தா பிள்ளை, புராணத்தை எடுத்து ஒளித்து வைத்து விட்டார். படிப்பதற்கு புராணம் இல்லாமல் ஐயர் அவர்கள் துன்புறுவதைக்கண்ட ஆறுமுகத்தா பிள்ளை, ஓர் புதிய செய்யுளைப்பாடி முடித்தால் புத்தகம் கிடைக்கும் என்றார். ஐயர் அவர்கள் ஆசிரியர் தமக்குச்சொல்லி காட்டிய வெண்பாவைப் பாடினார்.

" ஆறுமுகபூபாலா அன்பிலார் போலென்பால்
மாறுமுகங் கொண்டால் மதிப்பவரார்—கூறுதமிழ்
வாசிக்க வந்தவென்மேல் வன்மமென்ன யாவருமே
நேசிக்கு மாதயை செய்நீ "

ஆறுமுகத்தா பிள்ளை, இப்பாடலைக்கேட்டு மகிழ்ந்து மாயூரப்புராணத்தைக் கொடுத்தார்.

மற்றொரு நாள் ஆறுமுகத்தா பிள்ளை ஐயர் அவர்களின் எழுத்தாணியை ஒளியவைத்துவிட்டார். எழுத்தாணியைக் காணாமல் ஐயர் அவர்கள் வருந்தியபோது எழுத்தாணி வேண்டுமென்று ஓர் பாடல் பாடினால் கொடுப்பதாகச்சொன்னார். ஐயர் அவர்கள் மகாவித்வான் தமக்குக் கற்பித்த ஓர் வெண்பாவைப் பாடினார்.

" தழுவுபுகழ் ஆறுமுகத்தாளாளா என்றும்
வழுவில் புராணம்வரைய—மெழுகில்
அழுத்தாணிப் பொன்னால் அமைந்த உருவிற்றாம்
எழுத்தாணி ஒன்றெனக்கின்றீ "

ஆறுமுகத்தா பிள்ளை கேட்டு எழுத்தாணியைக்கொடுத்தார். இதனால் ஆறுமுகத்தா பிள்ளை தமிழ்ப்பாடல்களில் கொண்டிருந்த ஆர்வம் புலனாகிறது.

மதுரையில் தங்கிய "நாராய் நாராய்" என்ற அகவலைப்பாடிப் பாண்டிய அரசனைக்கண்டு பல பரிசுகளைப்பெற்று வந்த சத்திமுற்றப்புலவர் வாழ்ந்த இடம் திருச்சத்திமுற்றமே.

# 16. இலக்கியப் பாடல்கள்

## திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்கள்

பண்–சாதாரி

1 பாடல்மறை சூடல்மதி பல்வளையொர் பாகம்மதில்
மூன்ெறாகணையால்
கூடஎரியூட்டி யெழில்காட்டி நிழல்கூட்டுபொழில்
சூழ்பழைசையுள்
மாடமழபாடி யுறைபட்டிசரம் மேயகடிகட் டரவினர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறிகாட்டிவினைவீடுமவரே.

2 நீரின்மலி புன்சடையர் நீளரவுகச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது ஏந்தியுடை கோவணமும் மானின்
உரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள் காதல்செய்து
மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழைசை பட்டிசரமேத்தவினை பற்றழியுமே.

3 காலை மடவார்கள்புன லாடுவது கௌவைகடியார்
மறுகெலாம்
மாலைமணம் நாறுபழையாறை மழபாடியழ காயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பனுறை பட்டிசர மேபரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி விண்ணுலகம்
ஆளுமவரே.

4 கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக மேத்துகமழ்
செஞ்சடையினன்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட ஆடவலபால்
மதியினன்
மண்ணின்மிசை நேரின்மழபாடி மலிபட்டிசர மேமருவுவார்
விண்ணின்மிசை வாழும்இமை யோரொடுடனுதலது
மேவலெளிதே.

5 மருவமுழ வதிரமழ பாடிமலி மத்தவிழ வார்க்க அரையார்
பருவமழை பண்கவர்செய் பட்டிசரமேய படர்புன்
சடையினன்
வெருவமத யானையுரி போர்த்துமையை அஞ்சவரு
வெள்விடையினன்
உருவமெரி கழல்கள்தொழ உள்ளமுடை யாரையடை
யாவினைகளே.

6 மறையினொலி கீதமொடு பாடுவன பூதமடிமருவி விரவார்
பறையினொலி பெருகநிகழ் நட்டம்அமர் பட்டிசரமேய
பனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை யேற்றபுனல்
தோற்றநிலையாம்
இறைவனடி முறைமுறையின் ஏத்துமவர் தீத்தொழில்கள்
இல்லர்மிகவே.

7 பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை யோருலகு
பேணலுறுவார்
துறவியெனும் உள்ளமுடை யார்கள்கொடி வீதியழகாய
தொகுசீர்
இறைவனுறை பட்டிசரமேத்தியெழுவார்கள் வினையேது
மிலவாய்
நறவவிரையாலும் மொழியாலும்வழி பாடுமறவாதவவரே.

8 நேசமிகு தோள்வலவனாகியிறை வன்மலையை நீக்கியிடலும்
நீசன்விறல் வாட்டிவரை யுற்றதுணராதநிரம்பாமதியினன்
ஈசனுறை பட்டிசரமேத்தி யெழுவார்கள் வினையேது
மிலவாய்
நாசமற வேண்டுதலின் நண்ணலெளி தாம்அமரர்
விண்ணுலமே.

9 தூயமலரானும் நெடியானும் அறியாரவன தோற்றநிலையின்
ஏயவகை யானதனை யாரதறிவாரணிகொள் மார்பினகலம்
பாயநல நீறதணி வானுமைத னோடுமுறை பட்டிசரமே
மேயவன தீரடியுமேத்த எளிதாகுநல மேலுலகமே.

10 தடுக்கினை யிடுக்கிமட வார்களிடு பிண்டமது
வுண்டுழல்தரும்
கடுப்பொடி யுடற்கவசர் கத்துமொழி காதல்செய்திடாது
கமழ்சேர்
மடைக்கயல் வயற்கொள் மழபாடிநகர் நீடுபழையாறை
யதனுள்
படைக்கொருக ரத்தன்மிகு பட்டிசர மேத்தவினை
பற்றறுதலே.

11 மந்தமலிசோலை மழபாடிநகர் நீடுபழையாறை யதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர மேயபடர்புன் சடையனை
அந்தண்மறை யோரினிது வாழ்புகலி ஞானசம்
பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை
நிற்பதிலவே.

திருநாவுக்கரசர் பாடிய க்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகம்

12 தில்லைச்சிற்றம் பலமும் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக்குளி ரறைப்பள்ளி கோவல் வீரட்டம்
கோகரணங் கோடிகாவும்
முல்லைப்புறவம் முருகன் பூண்டி முளையூர்
பழையாறை சத்திமுற்றம்
கல்லில் திகழ்சீரார் காளத்தியும்
கைலாய நாதனையே காணலாமே.

திருஞானசம்பந்தர் இத்தலத்துக்குவந்து முத்துப்பந்தல்
பெற்றுப் பதிகம் பாடியதை குறிக்கும்
பெரிய புராணப் பாடல்கள்.

1 சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்தி ப்பழையாறை எய்துதற்கு
நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை மேற்றளிசென் றெய்தினர்.

2 திருவாறை மேற்றளியில் நிகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி உருகியஅன் பொடுபோற்றி
மருவாருங் குழல்மலையாள் வழிபாடு செய்யஅருள்
தருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார்.

3 திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள் ஆர்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றில் அடையாமற் கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால்

4 வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதம்
தம்மை அறியாதபடி தண்தரளப் பந்தர்எடுத்
"தெம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீசர்" என்றியம்ப

5 அவ்வுரையும் மணிமுத்தின் பந்தரும்ஆ காயம்எழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதான் ஈசர்திரு வருளாகில் இசைவதென
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்.

6 அதுபொழுதே அணிமுத்தின் பந்தரினை அருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரால் அப்பந்தர் பூம்பந்தரும்போலும்

7 தொண்டர் குழாம் ஆர்ப்பெருக்கச் சுருதிகளின் பெருந்துழனி
எண்டிசையும் நிறைந்தோங்க எழுந்தருளும் பிள்ளையார்
வெண்தரளப் பந்தர்நிழல் மீதணையத் திருமன்றில்
அண்டர்பிரான் எடுத்ததிரு வடிநீழல் என அமர்ந்தார்.

8 பாரின்மிசை அன்பருடன் வருகின்றார் பன்னகத்தின்
ஆரம்அணிந் தவர்தந்த அருட்கருணைத் திறம்போற்றி
ஈரமனங்களிதழைப்ப எதிர் கொள்ள முகம்மலர்ந்து
சேரவருந் தொண்டருடன் திருப்பட்டீச்சரம் அணைந்தார்.

9 சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி உள்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெண்கோ
பன்றிகிளைத் தறியாத பாததாமரை கண்டு [ட்டுப்
முன்தொழுது விழுந்தெழுந்து மொழிமாலை
போற்றிசைத்தார்.

10 அருள்வெள்ளத் திறம்பரவி அளப்பரிய ஆனந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் பேராத பெருங்காதல்
திருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
திருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார்.

சிவநாமப்பல்தொடை வெண்பா.

11 பட்டீச்சரமேவும் பால்வளை நாயகிசேர்
பட்டீச்சுரனே பராபரா.

பட்டீச்சரப்பதிற்றுப்பத்தந்தாதி.

12 வரைமாதிருக்குமொருகூறு மழுமானணிந்த திருக்கரமும்
அரைசேர் வேங்கையதளுடையும் அரவாபரணத் தகன்
மார்பும்
விரைசேர் கொன்றை முடியுமரை மேவுமடியும் வெளித்
நரைசேர் விடையான் திருப்பழைசை நகரி [தோற்றி
லருளப்பெற்றேனே.

—மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## பட்டீச்சுரப் புராணம்.

திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
இயற்றியது.

மதவாரணப்பிள்ளையார்.

1 நாமதவா ரணங்குறித்த படிகொடுதீ வளர்த்துமென
நவிலுந்தக்க
நாமதவா ரணங்குசிவ மிகப்பிளென வுங்கொள்ளா
னண்ணுமாற்றண்
நாமதவா ரணங்குமிறுந் தடப்பட்டீச் சரம்புகுந்து
நலியச்செய்தாம்
நாமதவா ரணங்குளிர்பூந் தாளருள வின்பநல
நண்ணினேமால்.

அனுஞ்ஞை விநாயகர்.

2 சடையிலிளம் பிறைபொலிய அதன்சாயை எனமுகத்தோர்
தவளக்கோடு

மிடைவொழுக் கமுதெனவெண் ணூலிலங்க வீசியவெண்
ணிலவுமான
வாடையரைவெண் படமிளிர வவ்வொளியை யஞ்சியிரு
ளடிவீழ்ந்தென்ன
விடைதலிலுந் துருவமைய வளரனுளை மழகளிற்றை
எண்ணிவாழ்வாம்.

முருகக்கடவுள்.

3 இறவிதபுத் தலையுணர்த்த யமனைவருத்தியதந்தை
எண்ணந்தேர்ந்து
பிறவிதபுத் தலையுணர்த்த வயனைவருத்துபுமறைகள்
பிதாவுஞ்சேயு
மறவிதபுத் துணர்மினரு நியரென்றேற்றிய கருணை
வள்ளலன்பர்
உறவிபசு மயிலுகைக்குங் குமாரநாய கன்மலர்த்தாள்
உள்ளிவாழ்வாம்.

பட்டீசர்.

4 மாமேவு பண்ணவரு மெண்ணவரும கவானு மறைநூலாய
பாமேவு நாவலனுங் காவலனு முனிவரரும் பகர்மற்றேரும்
காமேவு பன்மலரு மென்மலரும் படியிறைப்பக்காட்சிநல்கு
தாமேவு திருவுருவோ ரெட்டீசர்பட்டீசர் சரணஞ்சார்வாம்.

ஞானம்பிகை.

5 நயனநுதல் பன்னிறத்த வயனரியாதியர் பலரும்நயக்குமாறு
வியனமைய வேற்றிடவும் வேறுநிற முருவனையான்
மேனியேபோல்
பயனமையும் வெண்மகளும் செம்மகளும் கலக்கவுந்தம்
பண்புமாருக்
கயன்மருள்கட் பல்வளைக்கைக் காமருஞானம்பிகைதாள்
கருத்துள்வைப்பாம்.

சபாபதி.

6 வந்துதரி சித்துடுவார் மலமாசு மண்ணவெழு
மாண்புபோலச்
சிந்துபல சீகரமந்தாகினிவெவ்வினைக்காடுதீத்தலேபோன்
முந்துசுடர் விட்டெழுசெந் தழலின்மே னேக்கவொளிர்
மூவாமன்றில்
நந்துதிரு வருள்பெருக நடநவிலும் பெருமானை
நயந்துவாழ்வாம்.

## தக்ஷிணாமூர்த்தி.

7 இருவரா லியற்றிரண்டு மெய்துருவ மெய்தாமல்
எந்தஞான்றும்
ஒருவரா லளப்பருந்தன் னடிமருவி யின்பநிலை
உவப்பயாங்கள்
இருவராலியற்றிரண்டு மெய்தாத திருவுருவம் எய்திநாளும்
ஒருவரா லளப்பருமா லடிமருவும் பெருமானை
உளங்கொள்வாமால்.

## திருநந்திதேவர்.

8 இடையிநெற் றொழியச்சூட லெப்பெய ரிறைக்கப்பேரே
அடைதரு தனக்குமாக்கி அவன்பணி முடியிற்றாங்கிக்
கடையரேம் பணியுமங்கோ கனகநேரடியிற் றங்கு
முடையனெங் குரவர் முன்னோன் அருளடைந்துய்வார்
மேலோர்.

## திருஞானசம்பந்தர்.

9 இறையரு ளதனானூர்தி எய்தியு நீழல்செய்யும்
முறையதொன் றெய்திலேமென் றயனொடு முகுந்தனணக்
குறைவிலாச் சிவிகையோடு பந்தருங்குலவப் பெற்ற
நிறைவுசால் காழிஞானப் பிள்ளைதாள் நினைந்துவாழ்வாம்.

## திருநாவுக்கரசர்.

10 விடமெழ வெறுப்பு வைத்தா ரமுதெழ விருப்பஞ்செய்த
கடவுளரயன் மாறுணக் கையரப் பூதியிட்ட
சுடர்விட மமுதமள்ளி யள்ளியுண்டளவா இன்பத்
தொடர்பமைந் தொளிர்வாகீசர் துணையடி போற்றி
செய்வாம்.

## சுந்தரமூர்த்தியார்.

11 மறையவ னெனும்பேர் பெற்றேன் மன்னவ னெனும்பேர்
பெற்றேன்
இறையவன் புகழ்யாவர்க்குண் டென்றயன் முகுந்தனுண
முறைமறை மறையோனென்று மொழிவதற் கேற்பத்தூது
கறைமிடற்ற வனைப்போக்கு நம்பிதாள் கருதிவாழ்வாம்.

## திருவாதவூரடிகள்.

12 கரைசெயு மசுத்தமாயா காரியமணியொன் றேற்று
வரைகொடன் மார்பில்வைத்த மால்சமழ்ப்புறவெண்ணில்
உரையெனுஞ் சுத்தமாயா காரியமணிகள் ஓவாப் [லா
பரையிடப் பெருமானுக்குச் சூட்டினர் பாதம்போற்றி.

சண்டேச நாயனர்.

13 புரைதடி மன்பினோர் பாற்புறமகங்கரையும் பெம்மான்
விரைகம ழாத்திநீழற் புறங்கரையாமல் மேவி
வரையென விருப்ப ஆன்பால் வரையறு குடங்கொண்டாட்
தரைபுக ழின்பந்துய்த்த மழவுதாள் சார்ந்துவாழ்வாம். [டித்

அறுபத்துமூவர்.

14 மறைமுதற் கலைகள்தேரு மாதேவை ஏவல்கொண்ட
தறைபுகழ் நாவலூரர் தனித்தனி அடியேன் யானென்
றறைபெருந் தவத்தராய அறுபத்துமூவர்க் கெண்ணில்
குறையுடை யானுமவ்வா றுரைப்பதுகுணமாங் கொல்லோ.

## பட்டீச்சரம் துர்க்கையம்மைப் பதிகம்.

சுவாமிமலை தேவாரம், ச. பாலசுப்பிரமணிய தேசிகர்
அவர்களால் இயற்றப்பட்டது.

1. சீர்கொள் மாகதவடிவு மெண்டோளு மம்புயச்
செங்கா மிலங்கு படையுஞ்
செயவசீகர வதனமருண் மடைதிறந்த விழி
சிறுமுறுவ லவிர் குழைகளுங்
காரோதி முகபடா மணிமகிம்புரிக் கொம்பு
களிறெருத்த தனபா ரமுங்
கனகவொட்டி யாணமுஞ் செம்பட்டி னுடையுமறை
காணரிய திரு வடிகளும்
நீரோ ருகத்திறை வனுதியர்கடலையண்ட
நிறை மாலை கொண்டிந்திரை
நிகரிலபி ராமியும ரம்பையர்கள் போற்றமரர்
நின்றுகொண் டாடி வாழ்த்த
வார்கடற் சூழ்புவி யெடுத்தேத்த நாடொறும்
வளருநின் சேவை யருள்வாய்
மகிமைதரு பட்டீச்சர அடியருள மெனநடன
மருவி வளர் துர்க்கையுமையே!

2. செங்கமல மின்றழுவு கொண்டலொடு முண்டகச்
செம்மன்முத லம்மை யென்று
சேவித் திரங்கநீ யாதுற்ற தென்னநின்
சீரடி முடித்துரை செய்வார்

வெங்கட் கடாமுகன் செய்யுமிடை யூறினுன்
மெலிவுற்ற மென்ன விழிநீர்
வீழப் பயந்துடல் நடுநடுங்கிச் சொலும்
விண்ணவரை யஞ்ச லென்று
சங்கரி விரைந்தசுரர் தங்களை வதைக்கமுத்
தலைவேலு மரிமேலு மாய்ச்
சங்கொலி யெழச்சூரர் மங்கையர் அழச்செற்று
ஜயமேவி யிகல் போயபின்
மங்கலம் பொலியமலர் மழைதேவர் சொரியநிதம்
வளருநின் சேவையருள் வாய்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

3. வேதச் சுரும்பரிசை யோதவழி னறவுண்டு
விரைமலர்க ளவயவ மென
விரிபெருமை தழையவடி பரவுமவர் மிடியகல
விழைவருட் கனி பழுத்தே
பாதலமுதற் பவளமள வப்பசந் தோங்கு
பஞ்ச தருவே சஞ்சலம்
படரேழு பிறவிதரு பாசமோ சஞ்செய்த
பத்தர்சித் தத்தி லென்றும்
சீதவமு தம்பொழியு மிந்துவே மெய்ஞ்ஞான
தீபமாய் நின்ற சுடரே
சிவசமய நெறிதவறு மறிவிலர்க ளணுகாத
செய்ய தழலே பொய்யிலா
மாதவர்கள் செய்ததவ மேயடிமை துயர்நீக்கி
மனமுவந் தஞ்சல் என்பாய்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

4. தெண்டிரைத் துகில்சேடன் மண்டுமுடி கொண்ட
செஞ்சே யிழையின் வதனமெழிலார்
செல்வமுங் கல்வியுஞ் சேர்சோழ நாடதிற்
செங்கண னிணங்க மதியின்
துண்டுநுத லொண்டொடி யணிந்த சிந்தூரமாய்த்
துலங்குபுவி போற்றி யேத்துந்
தன்னுகன்னற், கதலிகமு, கின்படப்பை, தொகை
சொற்பெரிய விளை கழனியுந்

கொண்டறவழ் மாடமலி யந்தணர்கள் வீதியுங்
குறை விறவருறை வீதியுங்
குடிபெருகு காராளர் வளர்வீதி யாவணங்
குளிர்பதும மலர் வாவிசூழ்
மண்டலம்புகழ மறைதொழ வடியர்குறை தீர்க்க
வருளோங்க ஓங்கி வளரும்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

5. புத்திர ரிலாதவர்க ளுற்றடி வணங்கநற்
புத்திரப் பேற டைவதும்
புனிதமொழி யூமைவாய் பேசவுங் கூன்முடம்
போகமிகு வடிவ டைவதுங்
கற்றிலா தவர்முதற் கலையாதி புகல்வதுங்
கண்ணிழந் தோர் பெறுவதுங்
கதியிலா தவர்களிரு நிதியடைவ தம்மையிக்
கலியுகத் திற்புது மையாய்ச்
சித்திதரு நின்மகிமை காதினுற் கேட்டுனைச்
சிந்தித் திருந்த வடிமை
சிந்தையி லிருந்தகுறை தீராதி ருப்பதேன்
திருவுளத் தறியா ததோ
மற்றுமொரு தெய்வமுளதோ நின்னை யல்லாது
மண்டலங் கொண் டாடவாழ்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

6. பொன்னிலங் தார்மருவு புரிகுழலு மழலைமொழி
புதல்வரோ டுலவு மிந்தப்
பொய்யுலகு மீதாசை கொய்துஞ் சிவாகமம்
புகல்சரியை கிரியை நெறியாம்
நன்னிலை யடைந்து யோகத்தமு தருந்திமெய்ஞ்
ஞானவெளி கண்டு தொண்டர்
நலமிகுபரஞ் சொர்க்க மோக்ஷமுற் றேமுன்னை
நாடவப் பேறடைந் தார்
அன்னைநின் றிருவடி துதிப்பதல் லாதுதவ
மணுவளவு செயவறி கிலேன்
ஆனந்த வைபோக நடனசங் கீதமுட
னன்ப ரென்புருக வுருகு

மன்னுநின் னருளென்று மறைசொன்ன வழிகொண்டு
வாழ்த்தினேன் பார்த் திரங்காய்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் தூர்க்கை யுமையே!

7. வேதாள பூதமொடு பிரமராக்ஷ ஸகளும்
வீரன் சடா முனிகளும்
விரிதலைக் காடேறி பாவாடை யிருளனும்
வெட்டுணி குத் தாணியுந்
தீதான சின்பரிகள் சாமுண்டி மாடனுந்
தீயுமி ழும் வாயலகையும்
திருடர்செய் பாவையுங் கருமான மேவலுந்
திட்டியொடு பில்லி சூனியம்
வேதனைசெய் பாதகப் பிணிகளும் விடங்களும்
வினைசெயுஞ் சத்துரு வெலாம்
வீரமா தரியாளி யூர்திகங் காளியென்
வேதனையை நீக்க வென்று
மாதவர்கள் புகழும்நின் சேவடி நினைக்கவு
மயங்கிப் பயந் தோடுமே
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் தூர்க்கை யுமையே!

8. ஆரணத் தோசைபரி வாரணத் தோசைபுக
ழண்டார்கொண் டாடு மோசை
யாடரம் பையரோசை பாடல்விஞ் சையரோசை
யந்தணர் புகழ்ந்த ஓவாசை
சீரடியர் துதியோசை யெந்நாளு மாறுத
திருவிழா வெழி யோசையுஞ்
செல்லோசையுஞ் செறிதிரைக் கடலி ன்னோசையுந்
தேய்த்த திகஒசை வளருந்
தாரணிகுழற் கனதனக் கலவை யாடவர்கள்
சயிலபுய சந்தனம் வீள
சாலிநறை வீசுமலர் வாவிகயல் வீசுநற்
றண்புறை பொங்கி யெங்கும்
வார்திரைத் தாளமணம் வீசுபய காவேரி
மருவ வள மருவி வளரும்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் தூர்க்கை யுமையே!

O2:38.21493-T
N58



9 செம்பொன் விமானமணி மண்டபமு மாமதிற்
சிகர் கோபுர வாயிலுஞ்
செந்தழலை நிகர்மகிமை சிந்தியா தறிவிலாச்
சீவராசிக டோயினும்
முன்புபழ வினையறுத் திகபரந் தருநல்ல
மூர்த்தி தீர்த்தப் பெருமையும்
மொய்த்தளி யருந்துசெந் தேன்வன்னி விருக்ஷமு
மோக்ஷஸாம் பிராஜ்ய முதவு
மம்புவி துதிக்குநின் சந்நிதிப் பெருமையு
மாரா லுரைக்க வசமோ
அஞ்சுகத் திக்கமு தருத்திகற் பித்தசொல்
லாசையாய்க் கேட்பது போல்
வம்பவிழ் கலர்க்குழலி நீதந்த சொற்கொடுனை
வாழ்த்தினேன் பார்த் திரங்காய்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

10. மொழிவ தெல்லா முனதுமூல மந்திரசெப
மூடனேன் றிரிவ தெல்லாம்
முடிகொண்ட வாலயப் ரதக்ஷிணை முணவெலாம்
முற்று முன் னைவேத்யமாம்
பழுதில்செய் கருமநின் பணிவிடைக ணெஞ்சினிற்
பரவு நினைவே தியானமாம்
படிப்பதுன் புகழ் செவி மடுப்பதுன் கீர்த்தியாம்
பாலமுத மாகு மன்னை
ஒழிவறுங் களிகொளெஞ் செயல்களுன் பூசைக்
குதந்த செயலாக்கியென்று
முன்னடி யவர்க்கடிமை பாலசுப்பிரமணி யஞ்சொற்
குவந்தருண் மகிழ்ந்து செந்தேன்
வழிபதும மலரினமுன் மருவுகலை மகள்பரவ
வாமு நீடூழி காலம்
மகிமைதரு பட்டீசர் அடியருள மெனநடன
மருவிவளர் துர்க்கை யுமையே!

112825

## வாழ்த்து.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஸ்ரீ பட்டீசப் பெருமான் பதமலர் போற்றி.

உ

திருச்சிற்றம்பலம்

பந்தமலர் சோலைமழபாடி நகர் நீடுபேழை யாறைதனில்
பந்தமுயர் வீடுநல பட்டீச்சரமேய படர் பன்சடையனை
யந்தன்மறை யோரினிது வாழ்புகவி ஞானம் பந்தனணியார்
செந்த மிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே.

—**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.**

ஸ்ரீ முருகன் அச்சகம், கும்பகோணம்.